குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**DVC.No. 7/2022**

வழக்கு சாட்சி ம.சா. 1

2026ம் பிப்ரவரி மாதம் 13 –ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 13 .02.2026

**குறுக்கு விசாரணை**

நான் எந்தெந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் இந்தியன் வங்கி, பேங்க் ஆப் பரோடா, சேலம் கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் கணக்கு வைத்துள்ளேன். என் சம்பளம் இந்தியன் வங்கிக்கு தான் வரும். என் சம்பளபட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அதனை தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். நான் ரூ. 30,000/– சம்பளம் வாங்குகிறேன். நான் என்னுடைய Account statement நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நந்தா கல்லூரியில் உதவி பேராரசியராக பணிபுரிகிறேன். நான் உதவி பேராரசியராக எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் 27.09.2021ல் சேர்ந்தேன். நான் ME படித்துள்ளேன். நான் Phd படித்துக்கொண்டு இருக்கிறேன். 2023ல் படிக்க ஆரம்பித்து 6 வருடம் ஆகும். நான் பொய் சொல்லுகிறேன் என்றும் நான் Phd முடித்துவிட்டேன் என்றும் எனக்கு சம்பளம் ரூ.1,00,000/– வருகிறது அதனால் தான் நான் சம்பள பட்டியல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவருடன் உடன் பிறந்தவர்கள் இரண்டுபேர் என்றால் சரிதான். என் கணவர் தான் கடைசியாவார். என் கணவருக்கு தான் இறுதியாக திருமணம் நடந்தது என்றால் சரிதான். என் கணவரின் குடும்பத்தில் என் வயிற்றில் தான் முதல் வாரிசு என்றால் சரிதான். நான் என் கருத்தரிப்பை எங்கு கண்டறிந்தேன் ஜீன் 2020. JS மருத்துவமனை சேலத்தில் நானும் என் கணவரும் அவருடைய தாயாருடன் சென்று பரிசோதனை செய்து கொண்டேன் என்றால் சரிதான். முதல் குழந்தை என்பதால் குடும்பத்தில் எல்லோரும் சந்தோசமாக இருந்தோம் என்றால் இல்லை. ஜீன் மாதம் முதல் வாரத்தில் பரிசோதனைக்கு சென்றோம் அப்போது மருத்துவர் பரிசோதித்து உறுதி செய்தார். மருத்துவர் 4 அல்லது 5 வாரம் கணக்கு சொன்னார். என் மாமியார் திருமணம் ஆகிவந்தே 4 வாரம் தான் ஆகிறது 5வாரம் எப்படி சொல்கிறீர்கள் என்று

மருத்துவரிடம் கேட்டார். பின்னிட்டு வீட்டிற்கு வந்து என் கணவர் என் அறைக்கு வந்து திருமணம் ஆகி 4 வாரம் தான் ஆகிறது மருத்துவர் எப்படி 5 வாரம் சொன்னார் என்று சந்தேகப்பட்டு கேட்டார். எங்களுக்குள் பிரச்சனையே அது தான் ஆரம்பம். என் மனுவிலும், பிரமாணபத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் குழந்தை என் அக்காவின் கணவர் நவநீதகிஷ்ணன் எனது மாமாவிற்கு தான் பிறந்தது என்று அடிக்கடி சொல்லிக்கொண்டே இருக்கிறேன் என்றால் சரிதான், ஆரம்பத்திலிருந்தே என் மாமியர், என் கணவர், என் கணவரின் அக்கா எல்லலோரும் என்னிடம் என் புருஷன் தான் என் தெய்வம் என்று சொல்லும்படி தெந்தரவு செய்தார்கள். கொராணா காலகட்டத்தில் என் அக்கா குடும்பத்துடன் எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டார்கள் அப்போது உன் அக்காவின்கணவருக்கும் எனக்கும் உண்டான குழந்தை தானா என்றுசொன்னார்கள். அதனால் தான் குழந்தையை அக்காவும், தங்கையும் share பண்ணிக்காலம்னு சொன்னியா என்று குடும்பே உட்கார்ந்து பேசினார்கள். கடைசி நாள் நான் என் கணவரின் குடும்பத்தை விட்டு கிளம்பி வரும்போது இப்போ சம்தோஷமாடா என்று சொல்லிவிட்டு தான் நான் குழந்தையை என் மாமாவுக்கு பிறந்தது என்ற வார்த்தையை என் மனுவில் கூறியுள்ளேன். மேலே சொன்ன சங்கதிகளை என் மனுவிலும், பிரமாணபத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர்கள் என்னை சந்தேகப்பட்டார்கள் என்பதை தான் சொல்லியுள்ளேன். என் மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அழைத்துசென்றாரா என்றால் அழைத்து சென்றார் ஆனால் நல்ல முறையில் பார்த்துக்கொள்ளவில்லை. சேலத்தில் என் கணவர் வீட்டுக்கு அருகில் உள்ள ஆராம்ப சுகாதர நிலையத்தில் அட்டை பதிவு செய்தேன் என்றால் சரிதான். என் கணவர் எனக்காக எதுவும் செய்யவில்லை நான் தான் சென்று பதிவு செய்தேன். நான் பெங்களூர் சென்றபோது என் கணவர் தான் அழைத்து சென்றாரா என்றால் அழைத்து சென்றார் ஆனால் நல்ல முறையில் பார்த்துக்கொள்ளவில்லை. நான் சொல்வதுபோல் எனது கணவர் நவநீதகிருஷ்ணனுக்கு தான் குழந்தை பிறந்தது என்று சொல்வதுபோல் இருந்தால் மருத்துவ பரிசோதனைக்கு என்னை அழைத்து சென்றிருக்கமாட்டார் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நவநீதகிருஷ்ணனுக்கு தான் குழந்தை பிறந்தது என்று சொல்வதுபோல் இருந்தால் என் கணவரோ, கணவரின் உறவினரோ எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் கருவை கலைத்துவிடு அல்லது இந்த கருவேண்டாம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அபார்ஸ்சன் என்னும் வார்த்தையை பயன்படுத்தவில்லை ஆனால் அந்த குழந்தை என்னுடையது இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்தார். இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் 08.09.2021ம் ஆண்டு HMOP 456/2021 என்ற விவாகரத்து வழக்கு தாக்கல்

செய்யதுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் மனுவை இந்த நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் என் கணவர் குடிகார், பல பெண்களுடன் தொடர்பு உள்ளது என்று சொல்லியிருந்தேன் என்றால் என் கணவரின் அக்காவுடனும், அவருடைய அண்ணியுடனும் தொடர்புள்ளதாக சொல்லியுள்ளேன். இந்த சங்கதிகளை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் எனது மாமா நவநீதகிருஷ்ணனுக்கும் எனக்கும் தொடர்பு உள்ளது என்று இந்த வழக்கில் சொல்லியுள்ளேன் இந்த சங்கதிகளை HMOP வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு மனவேதனை உண்டாக்கவேண்டும் என்பதற்காக இந்த பொய் சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் குழந்தையின் பெயர் வீரன்னா (எ) தட்சித் என்றால் இல்லை K.B தட்சித். என் குழந்தைக்கு என் கணவரின் வீட்டில் தான் பெயர் வைத்தார்கள் என்றால் சரிதான். பெயர் வைக்கும்போது என் கணவரின் அக்கா ஒரு பவுன் தங்ககாசும் வெள்ளி சங்கடையும் பரிசாக அளித்தார் என்றால் சரிதான். என் கணவரின் அண்ணா குழந்தைக்கு பரிசுகள் வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். திருமணத்தின்போது கணவரின் வீட்டார் 3 பவுன் வளையல், 1/2 மோதிரம், 1/4 பவுன் தாலியும் போட்டார்கள் என்றால் சரிதான். நான் என் குழந்தையுடன் சந்தோஷமாக தான் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் ரூ.1,00,000/– சம்பாதிப்பதால் நான் தான் என் கணவருக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் குழந்தை என் மாமாவுக்கு தான் பிறந்தது என்று சொன்ன காரணத்தினால் என் கணவர் தற்போது வரை மனநல மருத்துவரிடம் சிகிச்சை செய்து கொண்டு வருகிறார் என்றால் சரியல்ல. அவர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் பெங்களூரில் வேலை செய்கிறார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் வாழும்போது என் கணவர் எனக்கு செல்போன் வாங்கி கொடுத்தார் என்றால் வாங்கி கொடுத்தார் அதை அவரே போட்டு உடைத்துவிட்டார். நானும் என் குழந்தையும் என் அம்மா அப்பாவுடன் வாழந்து வருகிறோம். மனுவில் நானும் என் குழந்தையும் தனியாக வாழந்து வருகிறோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வருமானமே எனக்கும் என் குழந்தைக்கும் போதுமானது என்றால் சரியல்ல. எனக்கு மட்டும்போதுமானது என்றால் சரிதான். நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அவருடன் சேர்ந்து வாழ எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருடைய அம்மா அப்பாவுடன் சேர்ந்து வாழ தயராக உள்ளார் என்றால் நான் தயாராக இல்லை. அவர் மட்டும் தனியாக வந்தால் தயார். என் கணவரோ என் கணவரின் குடும்பத்தாரோ என்னை உடல் அளவில் துன்புறுத்தவில்லை என்றால் சரியல்ல என் கணவர் என்னை அடித்துள்ளார்.

மனுவில் இந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தான் என் கணவருக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த ஒரு கொடுமையும் நடக்கவில்லை எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.